சிவஞான போதம்

விளக்கவுரை :

சித்தாந்த வித்யாநிதி மு. செல்வநாதன்

நூல் விவரம்

நூல் தலைப்பு : சிவஞான போதம் - சைவத் தமிழுரை விளக்கவுரை

ஆசிரியர் : சித்தாந்த வித்யாநிதி மு. செல்வநாதன்

பதிப்பு ஆண்டு : ஏப்ரல் 2014

நூல் அளவு : டெம்மி 1 x 8

உரிமை : ஆசிரியர்க்கு

எழுத்தளவு : 11 புள்ளி

பக்கங்கள் : 256 + 16

தாள் : மேப் லித்தோ (21..3 கே.ஜி)

விலை : உரு. 300

கணினி அச்சு : செ. அன்பரசன்

அச்சிட்டோர் : கவிக்குயில் அச்சகம்
10, புலிபோன் பஜார் இரண்டாம் தெரு
திருவல்லிக் கேணி, சென்னை - 600 0
கைப்பேசி : 938 10 899 40

நூல் கிடைக்குமிடம் : மு. செல்வநாதன்
3, அண்ணா நகர்,
சோளிங்கர் - 631102
வேலூர் மாவட்டம், தமிழ்நாடு
கைப்பேசி : 999 45 25 420

சைவத்தின் சமரசம்

சித்தாந்த வித்தகர் முரு. பழ. இரத்தினஞ் செட்டியார்

கிறித்துவ, இஸ்லாமிய சமயங்கள் உலகில் மிகுதியான மக்கட் கூட்டத்தைக் கொண்டவையாகும். பௌத்த சமயமும் மக்கட் கூட்டத்தை மிகுதியாக உடையதென்றாலும், கிறித்துவ இஸ்லாமிய சமயங்கள் போல வலிமையுடையதாக இல்லை. இந்து சமயம் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, பர்மா, மொரிசியஸ், பிஜி முதலிய நாடுகளில் வாழும் பெரும்பான்மையான இந்திய மக்களால் பின்பற்றப் பட்டாலும் ஏனைச் சமயங்களுக்குள்ள வலிமை அதற்கு இல்லை. காரணம் இந்து சமயம் என ஒரு தனிச் சமயம் இல்லை.

வேதத்தை பொதுவில் உடன்படுகின்ற சைவம், வைணவம், சாக்தம் முதலிய சமயங்களுக்கு ஒரு பொதுப் பெயராக, 'இந்து சமயம்' எனும் பெயர் வெளிநாட்டவரால் இடப்பட்டுள்ளது. வேதத்தைப் பொதுவில் உடன்பட்டாலும், சைவம், வைணவம், சாக்தம் ஆகியவை தமக்கே உரிய சிறப்பு நூற்களைப் பிரமாணமாகக் கொண்டு தனித்தன்மை குன்றாமல் தனித்தனிச் சமயங்களாகவே விளங்கி வருகின்றன.

இந்தியாவில் வடபகுதியில் வைணவம் மிகுதி; அதற்கடுத்து சாக்தம்; சைவம் சில இடங்களில் செல்வாக்குப் பெற்றுள்ளது; சமணம் வடநாட்டிலும், கர்நாடகத்திலும் ஆதிக்கம் பெற்றுள்ளது; பௌத்தம் மிகக் குறைவு. தமிழ் நாட்டிலும், ஈழத்திலும் உள்ள தமிழ்ப் பெருமக்களில் எழுபத்தைந்து விழுக்காட்டினர் சைவ சமயத்தைச் சார்ந்தவரே ஆவர். மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, பர்மா, மொரிசியஸ், பிஜி முதலிய நாடுகளில் வாழும் தமிழ் வம்சாவழியினரில் பெரும்பாலோர் சைவ சமயத்தைச் சார்ந்தவர்களே ஆவர். தமிழ் மக்களுள் வைணவம், கிறித்துவம், இஸ்லாம் முதலிய சமயங்களைப் பின்பற்றுவோர் சிறுபான்மையினரே ஆவர்.

சைவச் சமயத்தினுள் அகப்புறச் சமயங்களாகக் கொள்ளப்பட்ட பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம் ஐக்கியவாதம் ஆகியவை இன்று வழக்கில் இல்லை. இவற்றிற்குரிய சில ஆதாரங்கள் மட்டுமே ஆங்காங்கே காணப்படுகின்றன. அகச் சமயங்களாகிய பாடாணவாதம், பேதவாதம், சிவசமவாதம், சிவசங்கிராந்த வாதம்

ஈசுவர அவிகார வாதம், சிவாத்துவிதம் முதலியவை ஆகமங்களுக்குப் பொருள் கொள்ளும் முறையில் உண்டான கொள்கை வேறுபாடுகளே அல்லாமல் அவை தனிச் சமயங்கள் அல்ல. அவற்றுள் சில சிறிது மூச்சுவிடப் பார்த்தாலும் பொதுவாக அவை யாவும் இப்பொழுது சித்தாந்த சைவத்துள் கரைந்து போய்விட்டன.

சைவம் சோபான முறையினை அதாவது படிப்படியாக மக்கள் முன்னேறும் முறையினைத் தன் அடிப்படைக் கொள்கைகளுள் ஒன்றாகக் கொண்டுள்ளது. புலால் உண்ணுதல், சிறு தெய்வங்களை வழிபடுதல், தெய்வங்களுக்கு உயிர்ப் பலியிடுதல், மது அருந்துதல் முதலியவை சைவ சித்தாந்த கோட்பாட்டிற்கு முற்றிலும் விரோதமே ஆகும். ஆனால் இவற்றைக் கடைப்பிடிப்போர் திருநீறு பூசுவதாலும், சிவன், முருகன், பிள்ளையார் முதலிய சிவமூர்த்தங்களை எல்லாத் தெய்வங்களுக்கும் மேற்பட்டவை எனக் கொள்வதாலும், பொருள் தெரிந்தோ தெரியாமலோ திருமுறைகளையும், சித்தாந்த சாத்திரங்களையும் தம்முடைய நூல்கள் எனப் பயபக்தியோடு ஏற்றுக்கொள்வதாலும் படிமுறையில் திருந்துவர் என்னும் கருத்தில் இவர்கள் அனைவரும் சித்தாந்த சைவரே எனச் சைவம் கொள்கிறது. இன்றைய நிலையில் பழக்கவழக்கங்களை வைத்து எந்தச் சமயத்தினரையும் நிர்ணயிக்க இயலாது. தமக்குரிய சமயப்பிரமாண நூலை ஒருவர் பயபக்தியோடு ஏற்றுக்கொண்டால் அவர் அந்தச் சமயத்தைச் சார்ந்தவர் என வரையறை செய்வதுதான் அனுபவத்திற்குப் பொருத்தமாக இருக்கும். திருமுறைகளையும், சித்தாந்த சாத்திரங்களையும் ஒருங்கே முழுப் பிரமாணமாக - எந்த நூலுக்கும் மேற்பட்ட பிரமாணமாக ஏற்றுக்கொள்வோர் யாராயிருப்பினும் அவர் சித்தாந்த சைவரே எனக் கொள்வதில் எவ்விதத் தவறும் இல்லை.

சங்கரர் வேதாந்தம் ஒரு கொள்கையே அன்றிச் சமயம் அன்று. அதனைக் கடைப்பிடிப்போர் சிவச் சின்னங்களைத் தரித்துக் கொள்வர். சிவவழிபாடும் வைணவ நாம ஜபமும் செய்வர். திருமுறைகளில் அவர்களுக்கு வேண்டிய பகுதிகளை மட்டும் எடுத்துக் கொள்வர்.

சித்தாந்தச் சாத்திரம் அவர்களுக்குப் பூர்வபக்கமே அன்றிச் சுபக்கம் அன்று. எனினும் சமய அளவில் சிவ சின்னங்களைத் தரிப்பதால், தோற்ற ஒற்றுமை பற்றி மயங்கிச் சைவ மக்கள் பலர் அவர்களையும் சைவர்கள் என்றே கொள்கின்றனர். அவர்களும் தாம் சிவமதத்தைச் சார்ந்தவர் என்றே பத்திரங்களில் பதிந்து

கொள்கின்றனர். இராமநாமம், பஜகோவிந்தம், நாராயண மந்திரம் முதலியவற்றை அவர்கள் சொன்னாலும் தமிழக வைணவர் யாரும் சங்கரர் வேதாந்திகளைத் தம்மவராக ஏற்பதில்லை. படித்த சைவ மக்களில் சிலர் வேதாந்த, சித்தாந்த சமரசம் பேசுவதையும் காணலாம். தமிழக ஸ்மார்த்த அந்தணர்கள் தோற்ற அளவில் சைவராக இருந்தாலும் கொள்கை அளவில் 95 விழுக்காட்டினர் சங்கரர் வேதாந்தத்தைத் தழுவியவர்களே ஆவர். அவர்களுள் மிகச் சிலர் சைவத்தை முழுதும் ஏற்றுக்கொண்ட மகா சைவராக விளங்குகின்றனர். ஈழத்தில் மகா சைவர்கள் தமிழகத்தைப் பார்க்கிலும் கூடுதலாக உள்ளனர். அவர்கள் சைவ சித்தாந்தத்தை முழுதும் நம்பிப் பேசுவதைக் காணலாம்.

ஒரு சமயமாக இல்லாமல் வெறும் கொள்கையாக இருந்தும் இன்று உலகில் 'இந்து சமயம்' என்றால் 'சங்கரர் வேதாந்தம்' என்னும் அளவுக்கு அது செல்வாக்குப் பெற்றுள்ளது. சித்தாந்தப் பயிர் தவிர வேறு பயிர் விளையாத ஈழத்திலும் இப்பொழுது சங்கரர் வேதாந்தத்திற்கும் சித்தாடல் செய்வோரைக் கடவுளாகக் கருதும் கொள்கைக்கும் ஆதரவு இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அது 'விளையாத நிலத்து எங்ஙன் விளைந்தது?' என்னும் வாக்கை நினைவூட்டுகிறது.

'சாருவாகம் உள்ளிட்ட எல்லாச் சமயங்களும் பரமசிவனால் உண்டாக்கப்பட்டவை' எனச் சிவஞான பாடியச் சிறப்புப் பாயிரத்தில் சிவஞான சுவாமிகள் சொல்கிறார். ஆன்மாக்களின் விருப்பு, வெறுப்பு பூர்வ வினைநிலை, அறிவுநிலை ஆகியவற்றிற்கு ஏற்ப அவற்றை வெவ்வேறு நாடுகளிலும் வெவ்வேறு சமயங்களிலும் இறைவன் பிறக்குமாறு செய்விக்கிறான். எந்தச் சமயத்தில் ஒருவர் பிறந்தாரோ அந்தச் சமய ஒழுக்கத்தைப் பின்பற்றிச் சாதனைகளைச் செய்தால் தான் விருப்பு, வெறுப்புகள் தேய்ந்து ஆன்ம முன்னேற்றம் உண்டாகும். வேற்றுச் சமயத்தில் புகுந்தால் அம்மனத்தின்கண் உள்ள பூர்வ வாசனைகளும் பிள்ளைப் பருவத்தில் பெற்றோர்களால் ஊட்டப்பெற்ற வாசனைகளும் கிளர்ந்தெழுந்து சாதனையில் அழுந்த முடியாமல் தடை செய்யும். 'எல்லா மதமும் ஒன்றே: எம்மதமும் சம்மதம்' என்பது போலிச் சமரசமாகும். மதங்களுள் கொள்கை வேறுபாடுகளும் தத்துவ வேறுபாடுகளும், ஆசார வேறுபாடுகளும், வழிபாட்டுமுறை வேறுபாடுகளும் நிறைய உண்டு. எம்மதமும் சம்மதம் என்றால் சாதனை எப்படிப் புரிவது ? ஏதாவது ஒரு சமயத்தில் நின்றால்தான்

சாதனை புரியலாம் ? அவரவர்
சாதனை செய்தால்தான் முன்
இறைவன் தோன்றி உண்மையை
உலக இன்பத்தை முறையாக
அவசியம் எனக் கொள்ளப்ப
அமெரிக்கர் சாருவாகர் நல்
பேசியிருக்கிறார். நல்லொழு
உறைத்து நிற்க முயன்றால் இறை
உணர்வு முதிரும் பொழுது இறை
அவர்களுக்கு உணர்த்துவான். அ
இறைவன் திருவருளைப் பெற்று
சாதனை புரிவதற்காக அவரவர்
அவசியமாகும்.

மதமாற்றத்திற்கு சைவம்
நின்றும்' எனத்துவங்கும் சித்தியார்
அடைந்து சரியா கிரியா யோகம்
எனச் சொல்லப்படுவதால் வேற்
வந்துதானே ஆகவேண்டும் ? என
ஒருசமயம் விட்டு வேறொரு
சொல்லவில்லை. பிறவிதோறும்
இறுதிப் பிறப்பில் சைவத்திறம்
இப்பாடல் சொல்கிறது. 'சரியா
ஞானத்திறம் அடைவர்' என்பது
பொழுது, சரியையில் நின்று
அருள் முன் நின்றால் ஆண்டு
சாயுச்சிய முத்தியைப் பெறுவ
வேற்றுச் சமயங்களில் பிறந்தே
சாதனையில் உறைத்து நின்ற
திறத்தை இறைவன் அவர்களுக்
முத்தியை அடைவர் என்று
சமயங்களிலும் பிறந்து இறுதி
பெறுவர் என்றும் கொள்ள
திருமணத்தில் 'ஆறுவகைச்
திருவருளால் வீடுபெற வந்தாரு
எனச் சேக்கிழார் கூறுவதிலிருந்த

சாதனை புரியலாம் ? அவரவர் பிறந்த சமயத்தில் அவரவர் நின்று சாதனை செய்தால்தான் முன்னேறலாம். சாதனை முயற்சியில் இறைவன் தோன்றி உண்மையை உணர்த்துவான். சாருவாகத்திலும், உலக இன்பத்தை முறையாகத் துய்ப்பதற்கு நல்லொழுக்கம் அவசியம் எனக் கொள்ளப்பட்டுள்ளது. 'இங்கர்சால்" என்னும் அமெரிக்கச் சாருவாகர் நல்லொழுக்கத்தை மிக வற்புறுத்திப் பேசியிருக்கிறார். நல்லொழுக்கத்தில் ஒருவர் உண்மையாக உறைத்து நிற்க முயன்றால் இறை உணர்வுதானே உண்டாகும். இறை உணர்வு முதிரும் பொழுது இறைவன் தோன்றிப் பரம உண்மைகளை அவர்களுக்கு உணர்த்துவான். ஆகவே எந்தச் சமயத்தில் நின்றாலும் இறைவன் திருவருளைப் பெற்று முத்தியை அடையலாம். ஆனால் சாதனை புரிவதற்காக அவரவர் பிறந்த சமயத்தில் நிற்க வேண்டியது அவசியமாகும்.

மதமாற்றத்திற்கு சைவம் உடன்படுவதில்லை. 'புறச்சமய நெறி நின்றும்' எனத்துவங்கும் சித்தியார் செய்யுளில் இறுதியில் சைவத்திறம் அடைந்து சரியா கிரியா யோகம் செலுத்திய பின் ஞானம் அடைவர் எனச் சொல்லப்படுவதால் வேற்றுச் சமயத்தவர் சைவ சமயத்துக்கு வந்துதானே ஆகவேண்டும் ? என வினவலாம். எடுத்த பிறவியிலேயே ஒருசமயம் விட்டு வேறொரு சமயம் புகுமாறு இப்பாடல் சொல்லவில்லை. பிறவிதோறும் வெவ்வேறு சமயங்களில் நின்று இறுதிப் பிறப்பில் சைவத்திறம் அடைந்து முத்தி பெறுவர் என்றே இப்பாடல் சொல்கிறது. 'சரியா கிரியா யோகம் செலுத்திய பின் ஞானத்திறம் அடைவர்' என்பது பற்றிச் சித்தியார் பின்னர் விளக்கும் பொழுது, சரியையில் நின்று சாலோகம் அடைந்தோர் இறைவன் அருள் முன் நின்றால் ஆண்டு இருந்தவாறே ஞானத்தைப் பெற்றுச் சாயுச்சிய முத்தியைப் பெறுவர் எனச் சொல்கிறது. இதுபோலவே வேற்றுச் சமயங்களில் பிறந்தோர் அச்சமயத்தின்படி உண்மையான சாதனையில் உறைத்து நின்றால் பரம உண்மையாகிய சைவத் திறத்தை இறைவன் அவர்களுக்கு உணர்த்த ஆண்டிருந்தவாறே அவர் முத்தியை அடைவர் என்றும் அல்லாதாரே படிவழியே பல சமயங்களிலும் பிறந்து இறுதியில் சைவத்திறம் அடைந்து முத்தி பெறுவர் என்றும் கொள்ள வேண்டும். ஞானசம்பந்தப் பெருமான் திருமணத்தில் 'அறுவகைச் சமயத்தில் அருந்தவரும், வேறு திருவருளால் வீடுபெற வந்தாரும்' சோதியுட் புகுந்து வீடு பெற்றனர் எனச் சேக்கிழார் கூறுவதிலிருந்து இவ்வுண்மை புலனாகும்.

அவரவரும் அவரவர் சமயத்தில் நிற்பதைப் பாராட்டும் சைவ சமயம் பரமதகண்டனம் ஏன் செய்தது ? என வினவலாம். அவரவரும் அவரவர் சமயத்தில் நிற்கவேண்டும் எனக் கூறும் சைவம், அதுபோல சைவர்கள் சைவமதத்திலேயே நிற்க வேண்டும் என்பதை வலியுறுத்தக் கடமைப் பட்டுள்ளது. சைவ சமயத்தினுள் சமணம், பௌத்தம், கிறித்துவம் முதலிய சமயங்களும், சங்கரர் வேதாந்தம் போன்ற கொள்கைகளும் புகுந்து சைவ சமயத்தினரைத் தங்கள் மதங்களுக்கும் கொள்கைகளுக்கும் இழுத்தமையால் அவர்கள் வேற்று சமயம் புகாதவாறு தடுக்கவும் புகுந்தோர் திரும்பி வரவும் பரமதகண்டனம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. சைவத்தில் எழுந்த பரமத கண்டனம் தற்காப்பேயன்றி எதிர்த்தாக்குதல் அன்று. அவரவர் பிறந்த சமயத்தை விட்டுச் சைவம் புகுமாறு எக்காலத்திலும் நாம் அழைத்ததில்லை. அவரவர் பிறந்த சமயத்தில் அவரவர் நிற்கும் போது கொள்கை வேற்றுமை காரணமாக அவர்களை வெறுக்காமல் மிகவும் மதித்து அவர்களோடு பேரன்புகொண்டு வாழவேண்டும் என்றே சைவம் சொல்கிறது. 'பிறர் நன்றாக வாழ வேண்டும்; அதுபோல நம்மையும் நன்றாக வாழவிடவேண்டும்' என்பதே சைவம் சொல்லும் சமரசமாகும். இதனைவிட உண்மையான சமரசம் வேறு இருக்க முடியாது.

உ

சிவமயம்

இந்தியாவில் வறுமை ஏன் ?

- சித்தாந்த வித்தகர் முரு. பழ இரத்தினஞ் செட்டியார்

இந்தியா சமயத் துறையில் உயர்ந்திருப்பதாய்க் கூறமுடியாது. சமயம் பற்றி நிறைய பேசுவதால் இந்நாட்டில் சமய மேம்பாடு காணப்படுகிறது எனச் சிலர் கருதக் கூடும். சமய ஒழுக்கம் இல்லாத வெறும் வாய்ப்பேச்சு மேம்பாட்டிற்கு அடையாளம் ஆகாது. பொதுநல உணர்ச்சிக்கு அதாவது சமுதாயநல உணர்வு இருந்தால்தான் சமய ஒழுக்கம் வேரூன்ற முடியும். இந்தியாவில் தன்னல உணர்வு மிகுதி. இதனால், வணிகத் துறையிலும், சமுதாயத் துறையிலும் ஊழல்கள் மலிந்து காணப்படுகிறது. ஆகவே வறுமையும், அறியாமையும் தலைவிரித்து ஆடுவதில் வியப்பு இல்லை

அமெரிக்கா, உருசியா போன்ற நாடுகளில் சமுதாய உணர்வு பரவலாக இருப்பதால் அந்நாடுகள் செழிப்புற்று விளங்குகின்றன. இந் நாட்டிலோ சமயத்தின் பெயராலே பொய்யும் புரட்டும் போலி வழக்கங்களும், பொருளற்ற சடங்குகளும், பொறாமையும், பேராசையும் பெருகி யிருக்கின்றன. எனவே இந்தியா சமயத் துறையில் மேம்பாடு அடையவில்லை என்பது தேற்றம்.

சமய ஒழுக்கம் இல்லாததாலேயே இந்நாடு தாழ்வுற்று வறுமை மிஞ்சிப் பாழ்பட்டுக் கிடக்கிறது என அறிதல் வேண்டும்.